

பாமாலை 234 - ஒழிந்ததே இப்பூவினில்

1. ஒழிந்ததே இப்பூவினில்
எவ்வித்தியாசமாம்;
செழிக்கும் ஐக்கியம் கிறிஸ்துவில்,
சபை ஒன்றே ஒன்றாம்.

2. மெய் பக்தர் உள்ளம் கிறிஸ்துவில்
மா ஐக்கியம் ஒன்றியே,
செய் சேவை சேர்க்கும் மாந்தரை
பொற் கயிற்றாலுமே.

3. வாரும், கைகோரும், சபையில்
எம்மனுமக்களே;
ஒரே பிதாவை சேவிக்கும்
யாவரும் ஒன்றாமே

4. சேர்ந்தனரே இப்பூவினில்
பற்பல ஜாதியாம்
மாந்தர்தாம் யாரும் கிறிஸ்துவில்;
சபை ஒன்றே ஒன்றாம்.